**STARTING TIME 10.42 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 29/2019**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 28.01.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **சம்பத்** Father's Name :

Address :

Calling : Age :

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1. எனது பிரமாண வாக்குமூலத்தில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால், தெரியும். இவ்வழக்கை யார் தாக்கல் செய்தார்கள் என்றால் தனலட்சுமி தாக்கல் செய்துள்ளார். தாவாவில் என்ன சொல்லப்பட்டுள்ளது, அதில் என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன். என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சொத்தில் பாகம் வேண்டும் என்று கேட்டுள்ளார்.**

**2. தாவா எ–அட்டவணையில் எந்தெந்த சர்வே எண்ணில், எவ்வளவு விஸ்தீரண சொத்து உள்ளது என்றால், சர்வே எண் 326–ல் 1 காணி நிலம் உள்ளது. எ– அட்டவணை சொத்தில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்று தெரியுமா என்றால், 5 அயிட்டம் உள்ளது. பி–அட்டவணை சொத்தானது**

யாருடையது சொத்து என்றால், எனது அப்பா ராஜாவிற்கு சொந்தமானதாகும். பி–அட்டவணை சொத்தை பொறுத்து எனது அப்பாவிற்கும், அவரது உடன் பிறந்தவர்களுக்கிடையே பாகப்பரிவினை ஏதும் நடந்ததா என்றால், இல்லை.

3. எனது அப்பாவிற்கும், அவரது உடன்பிறந்தவர்களுக்கும் இடையே பாகப்பிரிவினை நடைபெறாத சொத்தை பொறுத்து தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால், ஆமாம். நடேச ரெட்டி என்பவர் மல்லிகா பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால், தெரியும். மல்லிகாவின் அண்ணன் பெருமாள் என்பவரும் மல்லிகா பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால், தெரியும்.

4. மல்லிகா என்பவர் அவர் மகள் அமுதவள்ளி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது. ஆனால் எனது பிரமாண வாக்குமூலத்தின் பத்தி–6 ன் கடைசியில், உரிமை இல்லாத சொத்தை மல்லிகா எப்படி பத்திரம் செய்தார் என்று வியந்தேன் என சொல்லி உள்ளேன் என்றால், சரிதான்.

5. மல்லிகாவிற்கு நடேச ரெட்டி எழுதி கொடுத்த பத்திரத்தில், மல்லிகா அவரது காலம் வரை சொத்தை அனுபவிக்க வேண்டும் என்றும், அதற்கு பிறகு அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகள் அனுபவிக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். பொன்னுசாமி என்பவரை எனக்கு தெரியுமா என்றால், தெரியும்.

6. மல்லிகா, அமுதவள்ளி, தனலட்சுமி ஆகிய மூவரும் சேர்ந்து ஒரு மனையை பொன்னுசாமிக்கு விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி மூவரும் சேர்ந்து ஒரு மனையை பொன்னுசாமிக்கு விற்பனை செய்த வகையில் பத்திரத்தில் உள்ள நிபந்தனையை அவர்கள் விலக்கி கொண்டார்கள் என்றால், சரியல்ல. எனவே, அந்த பத்திரத்தில் உள்ள நிபந்தனை நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

7. நான் என்ன படித்துள்ளேன் என்றால், 8ம் வகுப்பு படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ–2 ஆவணம் மல்லிகா, அமுதவள்ளி பெயருக்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால், சாட்சி ஆவணத்தை படித்துவிட்டு சரி என்று சொல்கிறார். எந்த தேதியில் அந்த ஆவணம் எழுதி கொடுத்ததாக உள்ளது என்றால், 30.05.2003 அன்று எழுதப்பட்டுள்ளது.

8. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ–5 ஆவணம் யார், யார் பெயருக்கு, எந்த தேதியில் எழுதப்பட்டுள்ளது என்றால், சாட்சி ஆவணத்தை படித்துவிட்டு 30.05.2003 அன்று தனலட்சுமி, அமுதவள்ளி பெயருக்கு எழுதி கொடுத்ததாக உள்ளது. மேற்படி இரண்டு ஆவணங்களும் ஒரே தேதியில் எழுதப்பட்டதா என்றால், ஆமாம்.

9. பி.வா.சா.ஆ–5 ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்தது என்றால், சாட்சி ஆவணத்தை படித்துவிட்டு, பாபு, பெருமாள் என்பவர்கள் சாட்சி கையெழுத்து செய்ததாக உள்ளது. சாட்சி பாபு என்பவர் தனலட்சுமியின் கணவர் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–5 ஆவணத்தை ரூ.50,000/– பெற்றுக் கொண்ட போது அமுதவள்ளி பெயருக்கு தனலட்சுமி எழுதி கொடுத்ததாக உள்ளது என்றால், சாட்சி ஆவணத்தை படித்துவிட்டு, சரி என்று சொல்கிறார். அவ்வாறு ரூ.50,000/– பணம் பெற்றுக் கொண்டு அந்த ஆவணத்தை எழுதி கொடுத்த போது நானும் உடன் இருந்தேன் என்றால், இல்லை.

10. பி.வா.சா.ஆ–2 ஆவணத்திலும் சாட்சியாக தனலட்சுமியின் கணவர் பாபு என்பவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால், பாபு என்பவர் கையெழுத்து செய்துள்ளார், ஆனால் அந்த கையெழுத்து வாதியின் கணவரின் கையெழுத்துதானா என்று தெரியாது.

11. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி–6ல் 2ம் பிரதிவாதி அவ்வப்போது பிரச்சனை என வருவார் என்று சொல்லி உள்ளேனா என்றால், இல்லை. தாவாவில் உள்ள சில சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுவிட்டது என்றால்,

சரிதான். பாகம்பிரிக்க வேண்டிய வேறு சில சொத்துக்களும் தாவாவில் சேர்க்கவில்லை என்றால், சரிதான். தாவா சொத்து விவரத்தின் சில சொத்துக்களுக்கு பொதுவில் குறிப்பிட்ட விஸ்தீரணம் என சொல்லப்பட்டுள்ளதால், அனைத்து பாகஸ்தர்களையும் தாவாவில் தரப்பினர்களாக சேர்த்தால்தான் முறையாக பாகம் பிரிக்க முடியும் என்றால், சரிதான். நான் ஒருதலைபட்சமாக வாதிக்கு மட்டும் ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனவே, தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

3, 5 முதல் 7 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

வாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

ENDING TIME 11.16.A.M.

G
YUVARAJ

Digitally signed by G YUVARAJ
Date: 2025.01.28 15:52:59 +0530